



# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com






சென்னை | மலர்: 01 | இதழ்: 102 | 07.10.2025 | செவ்வாய்க்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 102 | Tuesday | pages 4 | Rs.5/-


## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(7–10–2025)
விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–21

பிறை: வளர்பிறை
திதி
பௌர்ணமி காலை 9.50 வரை
பிறகு பிரதமை
நட்சத்திரம்:
ரேவதி பின்னிரவு 3.41 வரை
பிறகு அசுவினி
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00–4.30 மணி.
எமகண்டம்
காலை 9.00 – 10.30 மணி.
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 8–9 மணி.
மாலை 5–6 மணி

| | |
|---|---|
| மேஷம் | முயற்சி |
| ரிஷபம் | புகழ் |
| மிதுனம் | இன்பம் |
| கடகம் | நேர்மை |
| சிம்மம் | நற்செய்தி |
| கன்னி | நன்மை |
| துலாம் | உயர்வு |
| விருச்சிகம் | லாபம் |
| தனுசு | செலவு |
| மகரம் | வெற்றி |
| கும்பம் | தாமதம் |
| மீனம் | உழைப்பு |

# பழங்குடியின மாணவர்கள் பள்ளி செல்ல 26 வாகனங்கள்

## முதல்வர் ஸ்டாலின் தொடக்கிவைத்தார்



**சென்னை,அக்.7:**

பழங்குடியின பள்ளி மாணவர்களின் பயன்பாட்டிற்காக 26 வாகனங்களை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் திங்கள்கிழமை தொடங்கிவைத்தார்.

பள்ளி செல்வதற்கு வாகன வசதி இல்லாததால் இடைநின்ற பழங்குடியின மாணவர்கள் மீண்டும் பள்ளிக்கு செல்வதற்காக இந்த திட்டம் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

சென்னை தலைமைச் செயலகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், பழங்குடியின மாணவர்கள் பள்ளி செல்வதற்கான வாகனங்களின் பயன்பாட்டை முதல்வர் ஸ்டாலின் கொடியசைத்து தொடக்கிவைத்தார்.

முதல்கட்டமாக ஈரோடு, நீலகிரி, சேலம், தருமபுரி, திருச்சி மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு ரூ. 3.62 கோடி செலவில் 23 வாகனங்கள் மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (சிஎஸ்ஆர்) நிதியிலிருந்து 3 வாகனங்கள் என மொத்தம் 26 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், பழங்குடியின மக்களின் மருத்துவப் பயன்பாட்டிற்காக ரூ. 5.78 கோடி செலவில் 25 அவசரகால ஊர்திகள், ரூ. 4 கோடி செலவில் 20 நடமாடும் மருத்துவ ஊர்திகள் ஆகியவற்றையும் முதல்வர் ஸ்டாலின் கொடியசைத்து தொடக்கிவைத்தார்.

இந்த நிகழ்வில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### மருத்துவமனை கூடுதல் கட்டடங்கள் திறப்பு

சென்னையில் நேற்று காலை நடைபெற்ற நிகழ்ச்சியில், காணொலி காட்சி வாயிலாக நலத்திட்ட உதவிகளை வழங்கியும், கூடுதல் கட்டடங்களை திறந்தும் வைத்தார் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின்.

பழனி, திருப்பத்தூர், கூடலூர், சங்கராபுரம், மேலூர் அரசு உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ரூ.108.50 கோடியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டங்களை முதல்வர் ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

மேலும், தென்காசி, திருப்பத்தூர், நெல்லை உள்ளிட்ட இடங்களில் ரூ.42 கோடியில் கட்டப்பட்ட மருந்து கிடங்குகளும், மதுரை உணவு பகுப்பாய்வு கூட வளாகத்தில் ரூ.1.49 கோடியில் கட்டப்பட்ட ஆய்வகக் கட்டமும் திறக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தில் ரூ.75 லட்சம் மதிப்பில் உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள் திறக்கப்பட்டன.

மருத்துவம், ஓமியோபதி ஆணையரகம் சார்பில் ரூ.6.22 கோடியில் கட்டப்பட் கட்டடங்களையும் முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மேலும், மருத்துவம், ஓமியோபதி ஆணையரகம் சார்பில், ரூ.20.15 கோடி மதிப்பில் புதிய கட்டடங்களுக்கும் இன்று அடிக்கல் நாட்டிவைத்தார் முதல்வர்.

## தங்கம் விலை ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்தை கடந்து புதிய உச்சம்!

சென்னை: சென்னையில் இன்று (அக்., 06) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.880 உயர்ந்து ஒரு சவரன் ரூ.88,480க்கு விற்பனை ஆகிறது. கிராமுக்கு ரூ.110 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11,060க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சர்வதேச முதலீட்டாளர்கள் பாதுகாப்பு கருதி, தங்கத்தில் மிக அதிக அளவில் முதலீடு செய்து வருகின்றனர். இதனால், சர்வதேச சந்தையில் தங்கம் விலை உயர்ந்து வருவதால், நம் நாட்டிலும் அதன் விலை தினமும் புதிய உச்சத்தை எட்டி வருகிறது.

இந்நிலையில் இன்று (அக்., 06) தங்கம் விலை சவரனுக்கு ரூ.880 உயர்ந்து ஒரு சவரன் ரூ.88,480க்கு விற்பனை ஆகிறது. கிராமுக்கு ரூ.110 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11,060க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு கிராம் தங்கம் விலை ரூ.11 ஆயிரத்தை கடந்து புதிய உச்சம் தொட்டு உள்ளது. வரலாறு காணாத தங்கம் விலை உயர்வால் நகைப்பிரியர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

# நெருங்கும் வடகிழக்கு பருவமழை; முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை

**சென்னை,அக்.7:**

வடகிழக்கு பருவமழை நெருங்கி வரும் நிலையில், முன்னெச்சரிக்கைநடவடிக்கை குறித்து முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.

அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் பெய்யும் வடகிழக்கு பருவமழையானது, தமிழகத்தின் தென்கோடி பகுதிகளைத் தவிர்த்து பிற இடங்களில் இயல்பை விட சற்று அதிகமாக பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக, அக்டோபர் மாதம் வழக்கத்தை விட கூடுதலாக 15 சதவீதம் மழை பொழியும் என்று எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழகம் முழுதும் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கைநடவடிக்கை தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை செயலாளர் அமுதா மற்றும் அதிகாரிகள் கூட்டத்தில் பங்கேற்றனர்.



இந்தக் கூட்டத்தில் மழைநீர் தேங்காதவாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக அதிகாரிகளிடம் முதல்வர் கேட்டறிந்தார். கடந்த காலங்களில் வெள்ளப் பாதிப்பு பகுதிகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை நினைவில் கொண்டு அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

கடந்த வாரம் நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், கடலூர், திருச்சி, அரியலூர் ஆகிய டெல்டா மாவட்ட கலெக்டர்களுடன் காணொலிக் காட்சி மூலம் ஆலோசனை முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார். நெல் கொள்முதல் மற்றும் சேமிப்புக் கிடங்குகளின் நிலை குறித்து கேட்டறிந்தார்.

## போர் நிறுத்த திட்டம் இஸ்ரேல் - ஹமாசுக்கு டிரம்ப் எச்சரிக்கை



**அமெரிக்கா,அக்.7:**

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசாமுனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும்இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சித்து வரும் அமெரிக்க அதிபர் டிரம்ப் 20 அம்ச திட்டத்தை சமீபத்தில் பரிந்துரைத்தார்.

இதை இஸ்ரேல் ஏற்றுக் கொண்டது. இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி இஸ்ரேல் பிணைக்கைதிகளை விடுவிப்பது உள்ளிட்ட சில பரிந்துரைகளை ஹமாஸ் ஏற்றுக் கொண்டது. மற்ற பரிந்துரைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக தெரிவித்தனர்.

இதற்கிடையே பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க இஸ்ரேலும் ஒப்புக் கொண்டது.

இரு தரப்பும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முதல் கட்டத்தை செயல்படுத்த தயாராகி வருகின்றன. இதுதொடர்பாக இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்பு பிரதிநிதிகள் இடையே இன்று எகிப்தில் பேச்சுவார்த்தை நடக்கிறது. இதில் அமெரிக்க பிரதிநிதியாக ஸ்டீவ் விட்காப் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் போர் நிறுத்த திட்டத்தைஇருதரப்பும்விரைவாக செயல்படுத்த வேண்டும் என்று டிரம்ப் தெரிவித்து உள்ளார். இதுதொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

“இந்த வார இறுதியில், ஹமாஸ் அமைப்பினர் வசம் உள்ள பிணைக் கைதிகளை விடுவிப்பது, காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து மிகவும் முக்கியமான விவாதங்கள் நடந்துள்ளன. இந்தப் பேச்சுவார்த்தைகள் மிகவும் வெற்றிகரமாகவும், விரைவாகவும் நடந்து வருகின்றன. மேலும் அனைவரும் விரைவாக செயல்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நூற்றாண்டு பழமையான மோதலை நான் தொடர்ந்து கண்காணிப்பேன். நேரம் மிகவும் முக்கியமானது. இதில் விரைவாக செயல்பட வேண்டும். இல்லையென்றால் யாரும் பார்க்க விரும்பாத பெரிய ரத்தக்களரி தொடர்ந்து விடும்” என்று கூறியுள்ளார்.

## எவரெஸ்ட் மலையில் பனிப்புயல்; 1000க்கும் மேற்பட்டோர் சிக்கி தவிப்பு



**மஹாலங்கூர்,அக்.7:**

உலகின் மிக உயரமான மலைப்பகுதி எவரெஸ்ட் சிகரம். நேபாளம் மற்றும் சீனா எல்லையில் இந்த சிகரம் அமைந்துள்ளது. இரு நாடுகளில் இருந்தும் இந்த மலைச்சிகரத்துக்கு மலையேற்ற வீரர்கள் செல்கின்றனர்.சீனாவில் தற்போதுகோல்டன் வீக்எனப்படும் 8 நாட்கள் தொடர் விடுமுறையை ஒட்டி, மலையேற்றத்துக்கு இதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 1,000க்கும் மேற்பட்டோர் எவரெஸ்ட் மலையேறி, முகாம் அமைத்து தங்கியுள்ளனர்.

அப்போது, இந்த எவரெஸ்ட் சிகரத்தின் கிழக்கே அமைந்துள்ள சீனாவின் திபெத் பிராந்தியத்தில் கடும் பனிப்புயல் வீசியது. இதில், முகாமில் தங்கியிருந்த 1000க்கும் மேற்பட்ட மலையேற்ற வீரர்களும் சிக்கிக் கொண்டனர். அவர்களில் 350க்கும் மேற்பட்டோர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். எஞ்சியவர்களை மீட்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# சபரிமலை தங்கத் தகடுகள் எடை குறைந்த விவகாரம்; கேரள சட்டசபையில் எதிர்க்கட்சியினர் கடும் அமளி

**திருவனந்தபுரம்,அக்.7:**

சபரிமலை ஐயப்பன் கோவிலின் தங்கத் தகடுகள் எடை குறைந்த விவகாரத்தை எழுப்பி, கேரள சட்டசபையில் எதிர்க்கட்சியினர் கடும் அமளியில் ஈடுபட்டுள்ளனர்.

கேரளாவில் முதல்வர் பினராயி விஜயன் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி ஆட்சி நடக்கிறது. இங்குள்ள பிரசித்தி பெற்ற சபரிமலை அய்யப்பன் கோவிலில், கருவறைக்கு முன்பாக உள்ள இரு துவாரபாலகர்கள் சிலையில் பொருத்தப்பட்டிருந்த தங்கமுலாம் பூசப்பட்ட கவசத்தில், 4 கிலோ அளவுக்கு தங்கம் குறைந்ததாக சமீபத்தில் சர்ச்சை



எழுந்தது. இந்த விவகாரம் தொடர்பாக விரிவான விசாரணைக்கு தேவசம் போர்டு உத்தரவிட்டுள்ளது.இந்நிலையில், சபரிமலை ஐயப்பன் கோவிலின் தங்கத் தகடுகள் எடை குறைந்த விவகாரத்தைஎழுப்பி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி கூட்டணி கட்சி எம்எல்ஏக்கள் கேரள சட்டசபையில் கடும் அமளியில் ஈடுபட்டுள்ளனர். கையில் பதாகைகளை ஏந்தியவாறு சபாநாயகர் இருக்கையை முற்றுகையிட்டு அவர்கள் கோஷங்களை எழுப்பினர். இதனால், அவையில் சலசலப்பு நிலவியது.மேலும், இந்த முறைகேட்டுக்கு பொறுப்பேற்று தேவசம் அமைச்சர் வி.என். வாசவன் பதவி விலக வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# ராமதாஸ் ஐசியுவில் உள்ளதால் அவரை பார்க்க முடியவில்லை

**சென்னை,அக்.7:**

இதயம் தொடர்பான பரிசோதனைக்காக சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் ராமதாஸ் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு இன்று ஆஞ்சியோகிராம் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாமக தலைவர் அன்புமணி மருத்துவமனைக்கு நேரில் சென்று ராமதாஸின் உடல்நலம் குறித்து விசாரித்தார். மேலும், அவருக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் குறித்தும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அன்புமணி, “ நேற்று மாலை மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டார். ராமதாஸுக்கு ஆஞ்சியோகிராம் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது, இதயத்துக்கு செல்லும் ரத்துக்குழாய்கள் நன்றாக உள்ளன. பயப்படும்படி அவருக்கு எந்த பிரச்சினையும் இல்லை என இதய சிகிச்சை மருத்துவர்கள்



தெரிவித்தனர். அவர் 2 நாட்கள் மருத்துவமனையில் ஓய்வு எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். தொடர்ந்து சாப்பிடும் மாத்திரைகளை எடுக்க வேண்டும் என சொல்லியுள்ளனர். அவர் ஐசியுவில் இருப்பதால் பார்க்க முடியவில்லை. 6 மணி நேரம் ஐசியுவில் இருப்பார் அதன்பின்னர் சாதாரண அறைக்கு மாற்றப்படுவார். மருத்துவர்களிடம் பேசி விவரங்களை கேட்டறிந்தேன்” என்றார்.

ராமதாஸ் மற்றும் அன்புமணி இடையே ஏற்பட்ட மோதலால் பாமகவில் கடந்த சில மாதங்களாக குழப்பமான சூழல் நிலவி வருகிறது. இரண்டு வாரங்களுக்கு முன்பு அன்புமணியை கட்சியில் இருந்து நீக்குவதாக ராமதாஸ் அறிவித்தார். மேலும், அன்புமணி ஆதரவாளர்களை கட்சியிலிருந்து நீக்கியும், தனது ஆதரவாளர்களை பொறுப்பாளர்களாக நியமித்தும் தொடர்ந்து அறிவிப்புகளை வெளியிட்டு வந்தார் ராமதாஸ்.

அதேபோல, ராமதாஸின் ஆதரவாளர்களை நீக்கியும், தனது ஆதரவாளர்களை பொறுப்புகளில் நியமித்தும் அன்புமணியும் பதிலடி கொடுத்து வந்தார். இந்த சூழலில், தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ராமதாஸை, அன்புமணி நேரில் சென்று நலம் விசாரித்தது பாமக வட்டாரத்தில் பரபரப்பை உருவாக்கியுள்ளது.


தினம்தோறும் வெளிவரும்
ஆனந்தபாஸ்கர் இதழை
https://epaper.
anandabhaskar.com/
இணையதளத்தில்
படித்து மகிழலாம்.

## புரட்டாசி மாத சதுர்த்தசி



**கோவில்பட்டி, அக்.7:** தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருள்தரும் ஸ்ரீ செண்பகவல்லி அம்மன் உடனுறை அருள்மிகு ஸ்ரீ பூவனநாத சுவாமி திருக்கோவிலில் புரட்டாசி சதுர்த்தசி ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ ஆனந்த நடராஜ பெருமனுக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்கார தீபாராதனையும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

## முதலமைச்சர் கோப்பையில் தொடர்ந்து இரண்டு முறை பதக்கங்களை வென்ற வீரவிதை சிலம்ப அகாடமி மாணவி




**சிவகங்கை அக் 7:** மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை போட்டியில் சிவகங்கை மாவட்டத்தில் சிலம்பத்தில் வெள்ளிப்பதக்கம் வென்று அரசு பள்ளி மாணவி சாதனை.

அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி சிவகங்கையில் படிக்கும் மானாமதுரையைச் சேர்ந்த உடற்கல்வி இயக்குனர் இராமசாமி - சாரதா அவர்களின் மகள் ஜெயஸ்ரீ, இவர் வீர விதை சிலம்ப அகாடமியில் மாஸ்டர். கலைவளர் மணி. முனைவர் பெருமாள் அவர்களிடம் பயிற்சி பெற்று வருகிறார். அக்டோபர் 2- முதல் 9-ம் தேதி வரை சென்னை தமிழ்நாடு உடற்கல்வி பல்கலைக்கழகத்தில் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை நடந்து கொண்டிக்கிறது.

இதில் பெண்கள் பிரிவில் 60-70KG எடைப்பிரிவு தொடு முறை போட்டியில் ஜெய ஸ்ரீ வெள்ளிப் பதக்கத்தையும் ஊக்கத்தொகை 75,000 ரூபாய் காசோலையும் வென்றுள்ளார்.

சிவகங்கை மாவட்த்தில் முதன் முதலாக பெண்கள் பிரிவில் 2024 ம் ஆண்டிற்க்கான முதலமைச்சர் கோப்பையில் தங்கப்பதக்கத்தை வென்று சாதனை செய்து, 2025 ம் ஆண்டிற்க்கான முதலமைச்சர் கோப்பையில் வெள்ளி பதக்கத்தையும் வென்று சாதனை.

தொடர்ந்து இரண்டு முறை பதக்கங்களை வென்று அரசு பள்ளிக்கும், வீரவிதை அகாடமிக்கும் மானாமதுரைக்கும்,சிவகங்கை மாவட்டத்திற்க்கும் பெருமை சேர்த்துள்ளார். வெற்றி பெற்ற மாணவிக்கு தலைமை ஆசிரியர்கள், பயிற்சி யாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.

## திருப்பாச்சேத்தியில் துப்பாக்கி கவுண்டர் குருபூஜை விழா



**மானாமதுரை,அக்7:** சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தியில் உதயப் பெருமாள் எனும் துப்பாக்கி கவுண்டர் 224 ஆவது குருபூஜை விழா நடைபெற்றது. சுதந்திரப் போராட்ட வீரர் துப்பாக்கி கவுண்டருக்கு திருப்பாச்சேத்தியில் உள்ள சிவகங்கை தேவஸ்தானம், சமஸ்தானத்துக்குட்பட்ட திருநோக்கிய அழகியநாதர் சுவாமி கோயிலில் தனி சிலை நிறுவப்பட்டுள்ளது.

இவரது குருபூஜையை முன்னிட்டு துப்பாக்கி கவுண்டர் வாரிசுதாரர்கள் சார்பில் நடைபெற்ற குருபூஜை விழாவிற்கு உ காத்த பிள்ளை தலைமை தாங்கினார். மானாமதுரை சட்டப்பேரவை உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், திருப்புவனம் பேரூராட்சித் தலைவர் த.சேங்கைமாறன் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் பச்சேரி சி.ஆர். சுந்தர்ராஜன், மதுரை ஆதீனம்,சிவகங்கை சட்டப்பேரவை உறுப்பினர் செந்தில்நாதன், புதிய நீதி கட்சி மாநில அமைப்புச் செயலாளர் பொள்ளாச்சி டைகர் பாலு பல்வேறு வெள்ளாளர் உறவின்முறை அமைப்புகளைச் சேர்ந்த மாநில நிர்வாகிகள் பந்தல் ராஜா, அண்ணா சரவணன், மாதவன் பிள்ளை, மின்னல் பிள்ளை, இந்திரா, த.வெ.க தெற்கு மாவட்டச் செயலாளர் முத்துபாரதி உள்ளிட்ட ஏராளமானோர் துப்பாக்கி கவுண்டர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். விழாவில் சட்டப்பேரவை உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் சிலம்ப பயிற்சி மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி பாராட்டினார்.

மேலும் பெண்களுக்கு இலவசமாக சேலைகள் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை விழாக் குழு நிர்வாகிகள் முத்துக்குமார், சண்முகம், சோணைமுத்து, சப்பாணிதுரை,கார்த்திக், காளிதாசன் உள்ளிட்டோர் செய்தனர்.

## உலக ஆசிரியர் தின விழா மற்றும் இரண்டாம் பருவ புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு





நகராட்சி நடுநிலைப்பள்ளி நம்பியார் நகரில் நேற்றுமுன்தினம் (5.10.2025) உலக ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு பள்ளி ஆசிரியர்களுக்கு பன்னாட்டு லயன்ஸ் சங்க நிர்வாகி ஜி. காளிமுத்து அவர்கள் ஆசிரியர்களை பாராட்டி ஆசிரியர்களுக்கு நினைவு பரிசு மற்றும் இனிப்புகள் வழங்கி கௌரவித்தார்கள். இத்துடன் இரண்டாம் பருவ முதல் நாள் நிகழ்வாக மாணவ மாணவியர்களுக்கு புத்தகங்கள் வழங்கும் நிகழ்வும் இனிதே நடைபெற்றது

## கஞ்சா வழக்கில் வேலூர் இப்ராஹிம் மகன் கைது



**சென்னை, அக். 7:** தமிழக பாஜகவின் முக்கிய நிர்வாகிகளில் ஒருவர் வேலூர் இப்ராஹிம். இந்நிலையில், கஞ்சா வழக்கில் வேலூர் இப்ராஹிம் மகன் அப்துல் ரகுமானை போலீசார் கைது செய்தனர்.

மேலும், வேலூர் இப்ராஹிமின் கார் ஓட்டுநர் ரஷித்தையும் போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடம் இருந்தும் 15 கிராம் கஞ்சா, கார் உள்ளிட்டவைகளை சென்னை போலீசார் பறிமுதல் செய்தனர்.

## நிதி வழங்கிய மத்திய அரசு: RTE சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம் என தமிழக அரசு அறிவிப்பு

**சென்னை, அக். 7:** இலவச கல்வி உரிமை சட்டத்தின் (RTE) கீழ் தனியார் பள்ளிகளில் 25 சதவீத ஒதுக்கீட்டில் எல்.கே.ஜி. முதல் 1-ம் வகுப்பு வரை இலவசமாக படிக்க வழி வகை செய்யும் மத்திய அரசின் திட்டத்தில் தமிழகத்தில் 1 லட்சம் குழந்தைகள் ஆண்டு தோறும் சேர்க்கப்படுகிறார்கள்.

தற்போது மத்திய அரசு நிதி வழங்காததால் இந்த ஆண்டு மாணவர் சேர்க்கை நடைபெறவில்லை. இதனால் தனியார் பள்ளிகளில் இந்த வருடம் இலவச கல்வி திட்டத்தில் குழந்தைகளை சேர்க்க முடியவில்லை.

இந்த நிலையில் மத்திய அரசு தமிழகத்திற்கு நிதி வழங்கியதால் மாணவர் சேர்க்கையை அரசு தொடங்கியுள்ளது. காலதாமதமாக தொடங்குவ தால் மாணவர்கள் ஏற்கனவே பள்ளியில் சேர்ந்து படித்து வருகிறார்கள். இதனால் புதிதாக குழந்தைகளை சேர்க்க வாய்ப்பு இல்லை.

தற்போது தனியார் பள்ளிகளில் படித்து வரும் குழந்தைகளை இலவச கல்வி உரிமை சட்டத்தின் கீழ் சேர்க்க வேண்டும் என்று தனியார் பள்ளிகளுக்கு அரசு உத்தரவிட்டு உள்ளது.



ஏற்கனவே பெறப்பட்ட கல்வி கட்டணத்தை திருப்பி கொடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது. அதன்படி இன்று மாணவர் சேர்க்கைக்கான அறிவிக்கை தொடங்கியது. அனைத்து மாவட்டத்தில் உள்ள முதன்மை கல்வி அதிகாரிகள் தலைமையில் தனியார் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் அவர்களுக்கு குழந்தைகளை இலவச கல்வி திட்டத்தில் சேர்ப்பது தொடர்பான ஆலோசனைகள் வழங்கப் பட்டன. ஒவ்வொரு பள்ளியிலும் படிக்கக்கூடிய எல்.கே.ஜி., யு.கே. ஜி., 1-ம் வகுப்பு குழந்தைகளை இந்த திட்டத்தில் சேர்க்க வேண்டும். கல்வி கட்டணத்தை திருப்பி கொடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இதற்கு தனியார் பள்ளிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. பணத்தை திருப்பி கொடுப்பது சிரமம். காலாண்டு தேர்வு முடிந்துவிட்ட நிலையில் கட்டணத்தை திருப்பி கொடுத்தால் தனியார் பள்ளிகளுக்கு நஷ்டம் பெருமளவில் ஏற்படும்.

காலதாமதத்திற்கு அரசு பொறுப்பேற்க வேண்டும். நாங்கள் எப்படி பொறுப் பேற்க முடியும் என தனியார் பிரைமரி, நர்சரி, மெட்ரிக்கு லேசன் பள்ளிகள் சங்க மாநில தலைவர் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே தற்போது இணைய தளம் மூலம் விண்ணப்பிக்க முடியாது. பள்ளிகள் மூலம் விண்ணப்பிக்கலாம் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

## மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை கைப்பந்து விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுத்தொகை




**சென்னை, அக்.7:** மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை கைப்பந்து விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுத்தொகைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு.கு.பிச்சாண்டி அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.தர்ப்பகராஜ் இஆப., அவர்களும் நேற்று முன்தினம் (05.10.2025) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள மாவட்ட உள்விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக 2025 ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை கைப்பந்து விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற பள்ளி மாணவிகள் அணிகளுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகைகளை வழங்கினார்கள்.

பள்ளி மாணவிகளுக்கு மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை கைப்பந்து போட்டிகள் கடந்த 02.10.2025 முதல் இன்றைய தினம் முதல் திருவண்ணாமலை மாவட்ட உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களைச் சேர்ந்த பள்ளி மாணவிகள் அணி கலந்து கொண்டது. அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் கைப்பந்து போட்டிகளில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்த சேலம் மாவட்ட மாணவிகள் அணிக்கு ரூ.12 இலட்சமும், இரண்டாம் இடம் பிடித்த திருவண்ணாமலை மாவட்டமாணவிகள் அணிக்கு ரூ.8 இலட்சமும், மூன்றாம் இடம் பிடித்த திண்டுக்கல் மாவட்ட மாணவிகள் அணிக்கு ரூ.4 இலட்சத்திற்கான காசோலைகளை தமிழ்நாடு சட்டப்பேரவை துணை தலைவர் அவர்களும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.இராம்பிரதீபன், விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் (பொ) திருமதி. சண்முகப்பிரியா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாவட்டத்தில் வசிக்கும்

## இலங்கைத் தமிழ்ருக்கு புதிய வீடுகளை முதலமைச்சர் ஸ்டாலின் காணொளி க்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்





**சென்னை, அக்.7:** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மற்றும் மறுவாழ்த்துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்டத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழ்ருக்கு புதிய வீடுகளை காணொளி க்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (06.10.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அகரம்சிப்பந்தி ஊராட்சியில் சொர கொளத் தூர் மற்றும் தென்பள்ளிப்பட்டு இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிப்பவர்களுக்கு புதியதாக கட்டப்பட்டுள்ள 252 வீடு களை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு.கு.பிச்சாண்டி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி பயன்பாட்டிற்கு திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க. தர்ப்பகராஜ், இஆப., திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.என். அண்ணாதுரை, கலசப்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் திரு.பெ.சு. தி.சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலங்கை தமிழர் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அவர்களுக்கான மறுவாழ்வு, குடியிருப்பு மற்றும் உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்டகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. அதனடிப்படையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கலாபாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த தென்பள்ளிப்பட்டு மற்றும் திருவண்ணாமலை வட்டம் சொரகொளத்தூர் பகுதியில் வசிக்கும் இலங்கை தமிழர்கள் அரசிடம் தங்களுக்கு புதிய குடியிருப்புகள் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்ததன் பேரில், மாவட்ட நிர்வாகத்தால் அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டு, அரசு ஆணை எண் : 331 பொது (மறுவாழ்வு-2(1))த் துறை நாள் 30.05.2023 இல், சொரகொளத்தூர் முகாமிற்கு மாற்றாக ரூ 530.15 இலட்சம் மதிப்பீட்டில் 92 புதிய குடியிருப்புகளும், தென்பள்ளிப்பட்டு முகாமில் வசிப்பவர்களுக்கு ரூ 922.00 இலட்சம் மதிப்பீட்டில் 160 புதிய குடியிருப்புகள் துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், நாயுடுமங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட அகரம்சிப்பந்தி பகுதியில் மொத்தம் 252 புதிய குடியிருப்புகள் அமைத்து தர, தமிழ்நாடு அரசால் இசைவு அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்குடியிருப்புகளுக்கு உரிய தெருவிளக்குகள் வசதியும், புதிய மேநீர் தேக்கதொட்டி அமைத்து குடிநீர் வசதியும் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. இது தவிர, மொத்தம் ரூ 299.45 லட்சம் மதிப்பீட்டில், இரண்டு 30000லி கொள்ளளவு கொண்ட இரண்டு மேநீர் தேக்கதொட்டிகளும், ஒரு திறந்தவெளி கிணறு குடிநீர் ஆதாரமாகவும், பக்ககால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை தெருக்களும் அமைப்பட்டுள்ளது.

மேலும் இன்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலங்கைத் தமிழர்களுக்கான புதிய குடியிருப்புகளை திறந்து வைத்தார், அதனை தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குடியிருப்புகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மணி, திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் திரு. ராஜ்குமார் ,தனி வட்டாட்சியர் (இலங்கை தமிழர் நலன்) திரு.ரவி, திருவண்ணாமலை வட்டாட்சியர், கலசபாக்கம் வட்டாட்சியர், துரிஞ்சாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரையில் எம்ஜிஆர் சிலை சேதம்; கோழைகள் செய்த இழிசெயல்



**சென்னை, அக். 7:** மதுரையில் முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் சிலை சேதப்படுத்தப்பட்ட சம்பவத்திற்கு அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை; மதுரை, திருப்பரங்குன்றம், அவனியாபுரம் பகுதி வாடிவாசல் அருகே அமைந்துள்ள எம்ஜிஆரின் திருவுருவச் சிலையை சேதப்படுத்திய சம்பவம் பெரும் கண்டத்துக்குரியது.

எம்ஜிஆரின் புகழையும், அவரது கொள்கைகளையும் நேருக்கு நேர் எதிர்கொள்ள முடியாத கோழைகள் செய்த இழிசெயலாகவே இதை கருதுகிறேன்.

சிலையை சேதப்படுத்துவதன் மூலம் எம்ஜிஆர் செய்த சாதனைகளையும், அவரது புகழையும், அவர் தனது திட்டங்கள் மூலமாக மக்களிடையே ஏற்படுத்திய புரட்சியையும் சிறிதளவு கூட மக்கள் மனதில் இருந்து குறைக்கவோ, மாற்றவோ முடியாது.இச்செயலை செய்து, பொது அமைதியை சீர்குலைக்க நினைக்கும் சமூகவிரோதிகளை உடனடியாக கைது செய்து கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கும்படி தமிழக அரசை வலியுறுத்துகிறேன், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# நெல்லையில் அன்புமணியின் பேரணிக்கு போலீசார் அனுமதி மறுப்பு



**சென்னை, அக். 7:** உரிமை மீட்க தலைமுறை காக்க 100 நாள் நடைபயணத்தை பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் நெல்லை மாவட்டத்தில் அன்புமணி ராமதாஸ் நாளை (செவ்வாய்க்கிழமை) நடைபயணம் மேற்கொள்ள இருந்தார்.

இதற்கிடையில், கரூரில் நடிகர் விஜய் நடத்திய பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலால் 41 பேர் உயிரிழந்த சம்பவம், நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. எனவே தமிழக அரசு அரசியல் கட்சி கூட்டங்கள் மற்றும் பெரிய பொதுக்கூட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. அதன்படி தற்போது அதற்கான விதிமுறைகளை வகுக்கும் பணி தொடங்கி உள்ளது.

இந்த நிலையில், நெல்லையில் பாமக தலைவர் அன்புமணி இன்று (அக்.7) நடத்தவிருந்த பேரணிக்கு போலீசார் அனுமதி மறுத்துள்ளனர். நீதிமன்ற உத்தரவை காரணம் காட்டி போலீசார் அனுமதி மறுத்துள்ளனர். போலீசார் அறிவுறுத்தலை ஏற்று அன்புமணி தனது நடைபயணத்தை ரத்து செய்தார். மேலும் தாமிரபரணி நதியில் கழிவுநீர் கலப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து மக்களுடன் அவர் கலந்துரையாடுகிறார்.

# கரூர் பலி: நீதிபதி செந்தில்குமார் குறித்த அவதூறு கருத்துக்கு மூவர் கைது!

**சென்னை, அக். 7:** கரூர் கூட்டநெரிசல் வழக்கில் நீதிபதி செந்தில்குமாரின் உத்தரவைத் தொடர்ந்து, அவருக்கு எதிராக அவதூறு கருத்து பரப்பிய மூவரைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கரூர் விஜய் பிரசாரக் கூட்ட நெரிசல் தொடர்பான வழக்குகளை கடந்த வாரம் விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி செந்தில்குமார், சம்பவம் நடந்தவுடன் தொண்டர்களையும் ரசிகர்களையும் கைவிட்டுவிட்டுச் சென்ற விஜய்யையும் தமிழக வெற்றிக் கழகத்தையும் நீதிமன்றம் கடுமையாக கண்டிப்பதாக தெரிவித்தார்.

மேலும், விஜய் பயணித்த பிரசார வாகனத்தை பறிமுதல் செய்யாதது ஏன்? விஜய்க்கு எதிராக வழக்குப் பதிவு செய்யாதது ஏன்? என அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இதையடுத்து, நீதிபதி செந்தில்குமாரின் குடும்பப் பின்னணியைக் குறிப்பிட்டு அவருக்கு எதிராக பல்வேறு அவதூறு கருத்துகளை சமூக ஊடகங்களில் விஜய்யின் ரசிகர்கள் பதிவிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நீதிபதி செந்தில்குமாருக்கு எதிராக அவதூறு பரப்பிய குற்றச்சாட்டில், கண்ணன், டேவிட், சசி ஆகியோரை காவல்துறையினர் கைது செய்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# புத்தகத் திருவிழா...



தமிழக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர் காந்தி அவர்கள் ராணிப்பேட்டை வார சந்தை மைதானத்தில் மாவட்ட நிர்வாகம் பள்ளிக்கல்வித்துறை மற்றும் பொது நூலாக இயக்கம் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 60க்கும் மேற்பட்டு உள்ள புத்தக அரங்கங்கள் கொண்ட ராணிப்பேட்டை மாவட்ட 4 வது மாபெரும் புத்தகத் திருவிழா 2025 யை தொடங்கி வைத்து 107 பயனாளிகளுக்கு 163 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நல திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் சந்திர கலா , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஐமன் ஜமால் , ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே எல் ஈஸ்வரப்பன் , மாவட்ட வருவாய் அலுவலர் தனலிங்கம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி , நகர மன்ற தலைவர் சுஜாதா வினோத் , மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளனர்

# மக்களின் வரிப்பணத்தை தி.க.,வுக்கு அள்ளி கொடுக்கிறது ஸ்டாலின் அரசு: அர்ஜுன் சம்பத்



**திருப்பூர், அக். 7:** வள்ளலாரை விளம்பரத்துக்காக தி.மு.க., அரசு பயன்படுத்தி வருவதாக, ஹிந்து மக்கள் கட்சி நிறுவனர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.

உள்ளாட்சி அமைப்புகள் ஊழல்மயமாக உள்ளன. மதுரை, கோவை, திருப்பூர் என பல இடங்களில்,துாய்மை பணியாளர் பிரச்னை நீடிக்கிறது.

தமிழகத்தில், ஆர்.எஸ்.எஸ்., நுாற்றாண்டு விழா நிகழ்ச்சிக்கு, பல இடங்களில் தடை, கைது என போலீசார் இடையூறுகளை செய்துள்ளனர். தி.மு.க., அரசின் இந்த செயல் கடும் கண்டனத்துக்குரியது.

வள்ளலார் ஜெயந்திக்கு முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து சொல்லவில்லை; அவரது கொள்கைகளை பரப்பவும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், விளம்பரத்துக்காக வள்ளலாரை பயன்படுத்துகின்றனர்.

திராவிடர் கழகத்தை எதிர்த்து தான், தி.மு.க.,வை அண்ணாதுரை துவங்கினார். ஆனால், இன்று, தி.மு.க., கொள்கைகளுக்கு மாறாக முதல்வர் ஸ்டாலின் செயல்படுகிறார்.

திராவிடர் கழகத்திடம், தி.மு.க.,வை அடகு வைத்து விட்டனர். திராவிடர் கழகத்துக்கு, மக்கள் வரிப்பணத்தை அள்ளிக் கொடுக்கின்றனர்.

கரூர் சம்பவத்தில் பலியானவர்களுக்கு நீதி கிடைக்க, சி.பி.ஐ., விசாரணை தேவை. தமிழக வெற்றிக் கழகத்தை தடை செய்ய வேண்டும்.

அந்த கட்சி நடத்திய அனைத்து நிகழ்ச்சிகளுமே பொதுமக்களுக்கு இடையூறு தான். கரூர் சம்பவம் தொடர்பாக விஜயை கைது செய்ய வேண்டும்.

தி.மு.க., அரசை விமர்சித்தால் வழக்கு போடுகின்றனர். இதற்கெல்லாம், வரும் தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவர்.

எங்கள் கட்சியின் மாநில செயற்குழு கூட்டம், வரும் 17ம் தேதி கோவையில் நடக்கிறது. அதில், சட்டசபை தேர்தல் குறித்து ஆலோசிப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மூத்த எழுத்தாளர் கோதண்டம் மறைவு



**சென்னை, அக். 7:** 'எழுத்தாளர் கோதண்டம் மறைவு, கலை இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்' என, முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

அவரது அறிக்கை:

முதுபெரும் எழுத்தாளர் கொ.மா.கோதண்டம், 87, மறைவுற்ற செய்தி அறிந்து, மிகவும் வருந்தினேன். எளிய குடும்பத்தில் பிறந்து, பஞ்சாலை தொழிலாளராக தமது வாழ்க்கையை துவங்கிய கோதண்டம், அதே எளிய மக்களுக்கான எழுத்தின் வாயிலாக, இலக்கிய உலகில் தடம்பதித்த மிகச்சிறந்த படைப்பாளி. அது மட்டுமின்றி, சிறுவர்களுக்கான இலக்கிய படைப்புகளிலும் பெரும் பங்களிப்பை செய்து, இன்றைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தவர்.

பால சாகித்ய விருது, ஜனாதிபதி விருது, தமிழக அரசின் கலைமாமணி விருது என, பல்வேறு சிறப்புகளை பெற்றன, இவரது நுால்கள்.

இவர் எழுதிய நுால்கள், கடந்த ஏப்ரல் மாதம் தமிழக அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த எழுத்தாளர் கோதண்டம் மறைவு, கலை, இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்கு 20 சதவீத தீபாவளி போனஸ்: தமிழக அரசு அறிவிப்பு




**சென்னை, அக். 7:** தமிழக அரசின் பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்கு 20 சதவீத தீபாவளி போனஸ் அறிவிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 8,400 முதல் அதிகபட்சம் ரூ.16,400- வரை தீபாவளி போனஸ் வழங்கப்படும். மின் பகிர்மான கழகம், அரசு போக்குவரத்து கழகம், நுகர்வோர் வாணிப பொருள் கழகம் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களின் குரூப் டி, சி பிரிவு ஊழியர்களுக்கு இந்த தொகை அளிக்கப்படும். முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

# 'எதிர்த்து யாரும் போராடாத போது யாருடன் தமிழகம் போராடும்?'



**சென்னை, அக். 7:** சென்னை கிண்டி கவர்னர் மாளிகையில், வள்ளலாரின், 202வது பிறந்த நாள் விழா மற்றும் திருஅருட்பா நூல் வெளியீட்டு விழா நேற்று நடந்தது.

தமிழக கவர்னர் மாளிகை, கடந்த இரண்டு நாட்களாக ஆசீர்வதிக்கப்பட்ட இடமாக, ஆன்மிக கூடமாக இருந்து வருகிறது. கடந்த இரண்டு நாட்களாக நடந்த வள்ளலாரின் போதனைகள், இந்த இடத்தை புனிதமாக்கி விட்டன.

வள்ளலாரின் போதனைகள், உலகில் இப்போது நடக்கும் பிரிவினைவாதம், வறுமை போன்ற பிரச்னைகளுக்கு தீர்வு காணக் கூடியதாக உள்ளன. அவரின் தத்துவங்கள் எனக்கு மகிழ்ச்சியை கொடுத்தன. ஒவ்வொருநாளும், பத்திரிகைகள் வாயிலாக தீண்டாமை எனும் பெயரில், கொலை, அடிதடி சம்பவங்களை காணுகிறேன். பட்டியலின சமூகத்தினர், நம் சகோதர, சகோதரிகள். அவர்களை இந்த சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்கக்கூடாது.

இதுபோன்ற சம்பவங்கள், தமிழகத்திலும் நடக்கின்றன. தமிழகம், கல்வியில் சிறந்த மாநிலமாக உள்ளது. உயர் கல்வி சேர்க்கையில், தேசிய சராசரியை விட, தமிழகத்தில் சேர்க்கை சதவீதம் அதிகம். மேலும், எழுத்தறிவு பெற்றவர்கள் ஏராளம். இருப்பினும், இதுபோன்ற சம்பவங்கள் நடப்பது வருத்தம் அளிக்கிறது.

இந்த பிரச்னைகளுக்கு, சமுதாய சீர்திருத்தமே தீர்வு. ஆனால், இதுபோன்ற விஷயங்கள் நம்மை சென்றடைய கூடாது என்பதில், அரசியல், கண்ணும் கருத்துமாக உள்ளது. நம்மை பிரித்து ஆள்வதையே, அரசியல் ஒரு மார்க்கமாக கொண்டுள்ளது. இப்படி இருந்தால் தான், அவர்கள் ஆட்சியில், அவர்களுக்கு சாதகமாக செய்து கொள்ள முடியும். சமூக பாகுபாடுகளை களைய, வள்ளலாரின் பாடல்களே ஒரே வழி.

அதை பாடங்கள் வாயிலாக, நம்முடைய அடுத்த சந்ததியினருக்கு கொண்டு சேர்க்க வேண்டும். பாடங்கள் மூலமாக சென்றால், குழந்தைகளின் மனதில் பதியும்.

அதனால், இனி வரும் சமுதாயம் பாகுபாடு இன்றி உருவாகும்.

தமிழகம் முழுதும் நான் பயணம் மேற்கொள்ளும் போது, அங்குள்ள சுவர்களை பார்ப்பேன். அதில், 'தமிழகம் போராடும்' என்று எழுதப்பட்டிருக்கும்; யாருடன் போராடும்? தமிழகத்தை எதிர்த்து யாரும் போராடவில்லை. நாம் அனைவரும் சகோதர, சகோதரிகள்.இதுபோன்ற மனநிலையில் இருந்து அனைவரும் மாற வேண்டும். யாருடனும் இங்கு சண்டை கிடையாது. நாம் அனைவரும் இணைந்து முன்னேற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.



# தினம் ஒரு குறள்

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.** - குறள் 99

ఇంప్ఫుగ నుడువంగ నీడేరు సకలమ్ము
బండ బూతులేల బలుక వలయు? - కురళ్ 99

मधुर वचन का मधुर फल, जो भोगे खुद आप ।
कटुक वचन फिर क्यों कहे, जो देता संताप ॥ - कुराल 99

Insol Inidheendral Kaanpaan Evankolo
Vansol Vazhangu Vadhu? - Kural 99

# கிளைக் கழக நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா




**செய்யாறு, அக். 7:** செய்யாறு அடுத்த வெம்பாக்கம் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் மாமண்டூரில் ஒன்றிய செயலாளர் என். சங்கர், மாவட்ட அயலகஅணி துணைத் தலைவர் எம். கே. கார்த்திகேயன் ஆகியோரது ஏற்பாட்டில் நடைபெற்ற உறுப்பினர் சேர்க்கை களப்பணியில் பணியாற்றிய நிர்வாகிகளுக்கு எம் பி எம். எஸ் .தரணிவேந்தன், எம்எல்ஏ ஒ. ஜோதி ஆகியோர் பரிசுகள் வழங்கி பாராட்டினர் .மாநில, நகர ,ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# மதுரையில் சுதந்திர போராட்ட வீரர் சுப்பிரமணியசிவா பிறந்த நாள் விழா



**மதுரை, அக். 6:** மதுரையில் உள்ள தமிழ் நாடு பிராமணர்கள் சங்கம் நகர் கிளை சார்பில் சுதந்திர போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பிராமணர் சங்க நிர்வாகிகள் பக்தவச்சலம், அமுதன், வேம்பத்தூர் வாராஹி பீடம் நிறுவனர் விஜயன் ஸ்வாமி ஆகியோர் சுதந்திர போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# நாகை - இலங்கை கப்பல் போக்குவரத்து நீட்டிப்பு




**நாகை, அக். 7:** தமிழ்நாட்டின் நாகைக்கும், இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையே 'சுபம்' என்ற பயணிகள் கப்பல் இயக்கப்பட்டு வருகிறது. இந்த கப்பல் சேவை, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நீட்டிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் கோரிக்கையை ஏற்று, அக்டோபர் மாதம் 14, 21, 28 ஆகிய செவ்வாய்க்கிழமைகளிலும் சேவை நீட்டிக்கப்பட்டு, வாரத்தின் 7 நாட்களும் கப்பல் இயங்கும் என சுபம் கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும், தீபாவளி பண்டிகை அன்று மட்டும் கப்பல் சேவை ரத்து செய்யப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

# கவிதை அரங்கம்!





உன்னை செதுக்கி கொள்ள
உளி தேவை இல்லை
பலரது அவமானங்களும்
சிலரது துரோகங்களும்
போதும்

இன்பமும் துன்பமும்
ஆற்று வெள்ளம்
போன்றது நிலையாக

நிற்காது ஓடி விடும்
வெற்றியை நினைத்து
மகிழ்வதை விட
கடந்து வந்த தோல்விகளை
நினைவில் வைத்து
செயல்பட்டால்
வாழ்க்கையை என்றும்
மகிழ்ச்சியாக
வாழலாம்

## திரும்பிப் பாருங்கள்....




சில நேரம் நம் வாழ்க்கையை
நாமே திரும்பி பார்த்துக்கொள்ள வேண்டும்...
மௌனமாக... மெதுவாக...
உங்களை நீங்களே புரிந்துகொள்வதற்காக.
நாட்கள் எப்படி போனது?
எங்கே தவறுகள் நடந்தது?
எங்கே அமைதி கிடைத்தது?
சில நிமிடங்கள் அமைதியாக சிந்தியுங்கள்..
நீங்கள் உண்மையில் எப்படி இருக்கிறீர்கள்?
எங்கே மனம் சோர்ந்திருக்கிறது?
எந்த உணர்வு உங்களை அடுத்த அடி எடுத்து வைக்க முடியாமல் தடுக்கிறது?
இதை முடிந்தால் ஒரு பக்கத்தில் எழுதுங்கள்...
அல்லது சிறிது நேரம் சிந்தியுங்கள்...
அல்லது இதையெல்லாம் மனதில் நிறுத்தி வானத்தை பார்த்து சில நிமிடம் அமைதியாக புன்னகையுங்கள்....
இவை எல்லாம் உங்கள் பாதையை திருத்த உதவும்
வழிதவறி இருந்தால் திரும்ப ஒரு வாய்ப்பு.
உடனே தீர்மானம் எடுக்க வேண்டிய கட்டாயம் இல்லை...
அமைதியாக அழுத்தமாக
நல்லதொரு முடிவு எடுக்கலாம்
மென்மையாக... நேர்மையாக...
உங்களுக்காக

நன்றி - ஆனந்தி

# வேலையாள் !

" வாங்க துரை ! மண்டையப் பிளக்கிற வெயில்ல வந்திருக்கீங்க !"
" அட எதிர் வீடுதானுங்களே ! " என்றபடி தன்முகத்தை துண்டினால் அழுந்தத் துடைத்துக் கொண்ட துரை பிரபு அருகில் சோஃபாவில் அமர்ந்து கொண்டார்.
" ஒண்ணுமில்ல.." என ஆரம்பித்த துரை" வீட்டுவேலைக்கு ஆள் கேட்டிரு ந்தேனேஎன்ன ஆச்சுன்னு கேட்டுட்டுப் போகலாமுன்னு வந்தேன்." என்றார்.

" நாலு இடத்தில சொல்லு வச்சிருக்கேன்.அக்கம்பக்க வீடுகள்ல வேலை செய்றவங்களக் கேட்டுப் பார்த்தேன்..நேரமில்ல முடியாதுன்னு சொல்லிட்டாங்க.. கொஞ்சம்வெயிட் பண்ணுங்க !" என்றார் பிரபு.
" ஒருமாசமா வேலையாள் இல்லாத தால ரொம்பவும் கஷ்டமாயிருக்கு. அதுக்கு முன்னாடி வள்ளி இருந்தா. எட்டு வருஷமா வேலை பார்த்தா. பாவிப்பொண்ணு திடீர்னு விஷக் காய்ச்சல்ல போய் சேர்ந்துட்டா. அதுக்கப்புறமா யாரும் கிடைக் கல்ல." பெருமூச்சொன்று விட்டார் துரை. அதன்பிறகு கொஞ்சநேரம்பேசிவிட்டு தன் வீட்டுக்குப் புறப்பட்டார் துரை.
வீட்டினுள் நுழைந்ததும் அவர்மொபை லுக்கு வாட்ஸ் அப்பில் ஒரு செய்தி வந்திருந்தது. செய்யாரில் உள்ள துரையின் சம்பந்தி அனுப்பியிரு ந்தார். ஆர்வமுடன் படிக்க ஆரம்பி த்தார் துரை.
' வீட்டு வேலைக்கு ஒரு பையன் ரெடி.
பெயர் சின்னராஜ். வயது 20. படிப்ப றிவுஇல்லாதவன். ஆனால் நன்றாகப் பேசும் திறன் பெற்றவன். எந்த வேலையாக இருந்தாலும் முகம் கோணாமல் செய்வான். நம்பிக் கையானவன். நாணயமானவனும் கூட.. பிடித்திருந்தால் நாளைக்கே அவனை அனுப்புகிறேன். அந்தச் சின்னராஜின் புகைப்படத்தை யும் அனுப்பியிருக்கிறேன். நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள்.
ஸ்கிரீனை மெதுவாக மேல்நோக்கி ஸ்லைட் பண்ணியவர் கண்களில் அந்தச் சின்னராஜின் புகைப்பட ம் பட்டது. திடுக்கிட்டார் காரணம் புகைப்படத்தில் காணப்பட்ட சின்னராஜ் மனநலம் குன்றியவன் போல் தோற்றமளித்தான் ! தன் பாரி யாள் கமலாவிடம் விவரம் சொல்லி சின்னராஜின் புகைப்படத்தைக் காண்பித்தார் துரை. பாரியாளோ தீயை மிதித்ததுபோல் மிரண்டு போய் இரண்டடி பின்வாங்கினாள்." என்ன ங்க இது ! பையன் ஒரு தினுசா இருக்கான் ! " என்றாள் குரல் நடுங்க.
" நான்கூட முதல்ல அப்படிதான் நெனச்சேன் கமலா ! ஆனால் சம்பந்தியே சிபாரிசு பண்ணி அனுப்பியிருக்கார்.அதனால நார்மலாதான் இருப்பான். சரி. நீ என்ன சொல்றே ?"
சின்னராஜ் வந்து ஒருமாதமாயிற்று. வேலைகளை ஒழுங்காகச் செய்து வந்ததால் அனைவருக்கும் திருப்தி ஏற்பட்டது.



அன்று நண்பகல் மணி 12 இருக்கும்." டேய்... வெளக்கெண்ணெய்..." ஹாலி லிருந்து கூப்பிட்டார் துரை. தோட்டத் தில்வேலையாய் இருந்த சின்னராஜ் தன் காதில் விழாததுபோல் இருந் தான்.
மீண்டும் மீண்டும் துரை அழைக்க சின்னராஜ் தொடர்ந்து தன் வேலை யிலேயே கண்ணாயிருந்தான். அடுக்களையிலிருந்து இதை கவனித்த கமலாவுக்கு கோபம் தலைக்கேறியது ! விடு விடு வென்று பின் கட்டுக்குச் சென்றவள், " டேய்..சின்னராஜு அய்யா காட்டுக் கத்தலா கத்திக்கிட்டுருக்கார். நீ பாட்டுக்கு காதுல விழாது மாதிரி இருக்கே ?" கத்த உடனே ஹாலுக்கு விரைந்தான் சின்னராஜ்.
" ஐயா.."
" ஏண்டா...கத்திக்கிட்டிருக்கேன். உன் காதுல விழல்லியா ?"
" ஐயா...மன்னிக்கணும். நீங்க விளக்கெண்ணையத்தான் கூப்புடறீங்கன்னு நெனச்சுக்கி ட்டிருந்தேன்." என்றான் கூலாக.
" என்ன லொள்ளா...." அவனை முறைத்தவர் , "எரும்மாடு..எரும்மாடு !" என்றார் துரை.
சுற்று முற்றும் தன் பார்வையைச் செலுத்தினான் சின்னராஜ் .
" என்னடா பார்க்கிற ?"
" நீங்க கூப்பிடுற எரும்மாட்டைத்தான் தேடுறேன் !"
பக்கென்று சிரித்துவிட்டார் துரை. வாழைப்பழத்தில் ஊசி ஏற்று வதுபோல் அவன் பதில் சொன்னா லும் துரைக்குக் கோபம்வரவி ல்லை. சின்னராஜின் இயல்பானஅந்த எதார்த்தம் துரைக்குப் பிடித்திருந் தது.
" டேய்..உனக்கு மெயின் பஸ் ஸ்டாண்டு தெரியுமில்லையா ?"
" தெரியும்ங்க ! "
" பஸ் வெளியே போகுற வழியில போய் வலது பக்கம் திரும்பு. கிழக்கு ராஜவீதின்னு பேரு. கொஞ்சதூரம் போனா கணேஷ் தேங்கா மண்டின்னு பெரிய கடை இருக்கு."
" சரிங்க."
" அந்த மண்டியோட ஓனர் வேலாயு தம்னு பேரு. நம்ம தென்னந்தோப்புல பறிச்ச 500 தேங்காய் பின் கட்டு ஸடோர் ரூம்ல இருக்கு. அந்தத் தேங்காய்கள அவர் எடுத்துக்குறதா சொல்லியிருக்கார். நீ அவர் கிட்டப்போய் இன்னிக்கே வண்டி கொண்டு வந்து எடுத்துக்கச் சொல்லு !"
" ஐயா...சொல்லுங்க."
" டேய்..அதிகப்பிரசங்கி ! நான் உன்கிட்ட என்ன சொனேன். நீ என்ன செய்றே?" எரிந்து விழுந்தார் துரை.

" ஐயா...நம்மத் தோப்புக்காய் ஒண் ணொண்ணும் பெரியசைசுங்க... நான் பார்த்திருக்கேன். மார்க்கெட்டுல நிச்சயமா ஒருகாய் 40 ரூபா போகு ங்க. 30 ரூபாய் கம்மின்னு மனசுல பட்டுது..அதுக்காக அஞ்சு ரூபாய் எக்ஸ்ட்ரா கேட்டேங்க. அப்புறம் உங்க இஷ்டம்ங்க !"
சட்டென யோசனையில் ஆழ்ந்தார் துரை. பயல் கில்லாடிதான் ! தன்னு டைய கோணத்தில் கெட்டி க்காரத்த னமாகயோசனைபண்ணியிருக்கான். அதுவும் நியாயம்தான் !
" டேய்...ஃபோன ஏழுமலைக்கிட்டக் கொடு"
" ஐயா சொல்லுங்க.!"
" இதோபாருங்க ஏழுமலை ! பையன் கேட்குற தொகை சரின்னு மனசுக்குப் படறது. நீங்க மறுக்காம பணத்த கொ டு த்திட்டுதேங்காய வாங்கிக்குங்க !"
" ஐயா நாம ஏற்கனவே பேசினது காய் ஒண்ணுக்கு 30 ரூபாதானே!. இப்போ திடீர்னு அஞ்சு ரூபா பையன் பேச்சை க்கேட்டு ஏத்திட்டீங்க ?"
" ஏழுமல...நம்மத் தோட்டத்துக் காய் நீங்க பார்த்துருக்கீங்க. மற்ற காயைக் காட்டிலும் பெரிசு. மறுத்துப் பேசாம ஒத்துக்குங்க !"
" சரிங்க. சாயந்தரமா வேனோட வந்து காயை எடுத்துக்குறேன்.மொ த்தப் பணமும் அப்போ செட்டில் பண்ணிடறேன்."
துரையின் மனத்தில் உயர்ந்து நின்றான் சின்னராஜ். அவன்மேல் மரியாதை எழுந்தது. இனி அவனை ' சின்னராஜ் ' என பெயரிலேயே அழைக்கவேண்டுமென்றஉறுதி யான எண்ணமும் துரை மனத்தில் எழுந்தது !




-வி.கே.லக்ஷ்மிநாராயணன்
போரூர், சென்னை 600 116

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



“தரகரே... நீங்க ஒரு பெரிய விஷயத்தை மறைச்சிட்டீங்க.”
“என்ன சொல்றீங்க?”
“பெண் அஞ்சடி உயரம்னு சொன்ன நீங்க, மூணு அடி அகலம் இருப்பாள்னு சொல்லவே இல்லையே...”



# தினம் ஒரு சமையல்



## சின்ன வெங்காய சாம்பார்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| துவரம்பருப்பு | - 25 கிராம் |
| பாசிப்பருப்பு | - 25 கிராம் |
| கடலைப்பருப்பு | - 25 கிராம் |
| தக்காளி | - 1 |
| புளி (கரைசல்) | - எலுமிச்சை அளவு |
| பச்சை மிளகாய் | - 1 |
| சின்ன வெங்காயம் | - 4 |
| சாம்பார் பொடி | - 1 மேஜைக்கரண்டி |
| மஞ்சள்தூள் | - 1/2 தேக்கரண்டி |
| பெருங்காயத்தூள் | - 1/4 தேக்கரண்டி |
| கொத்தமல்லி | - சிறிது |
| உப்பு | - தேவையான அளவு |

தாளிக்க:

| | |
|---|---|
| எண்ணெய் | - 3 மேஜைக்கரண்டி |
| கடுகு | - 1/2 தேக்கரண்டி |
| உளுந்தம்பருப்பு | - 1/2 தேக்கரண்டி |
| சின்ன வெங்காயம் | - 4 |
| கறிவேப்பிலை | - சிறிது. |

செய்முறை:



அடுப்பில் கடாயை வைத்து சூடானதும் துவரம்பருப்பு, பாசிப்பருப்பு, கடலைப்பருப்பு மூன்றையும் போட்டு நன்கு வறுத்து சிறிது நேரம் ஆறவிடவும். ஆறிய பிறகு மிக்ஸ்சியில் பொடி செய்து கொள்ளவும். தண்ணீர் சேர்த்து கரைத்து வைத்துக் கொள்ளவும். தக்காளியை பொடிதாகவும், வெங்காயம், பச்சை மிளகாய் இரண்டையும் நீளவாக்கிலும் வெட்டி வைக்கவும். கடாய் வைத்து 2 மேஜைக்கரண்டி எண்ணெய் காய்ந்ததும் வெங்காயம், பச்சை மிளகாய் போட்டு வதக்கவும். பிறகு தக்காளி சேர்த்து நன்கு வதக்கவும். தக்காளி நன்கு வதங்கியதும் சாம்பார் பொடி, மஞ்சள் தூள், பெருங்காயத்தூள் சேர்த்து கிளறவும். பிறகு புளி கரைசல், உப்பு, தண்ணீர் சேர்த்து மசாலா வாடை போகும் வரை கொதிக்க விடவும். பிறகு பொடியை சேர்த்து கொத்தமல்லி தூவி அடுப்பை அணைக்கவும்.
தாளிக்க அடுப்பில் கடாய் வைத்து 2 மேஜைக்கரண்டி எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு, உளுந்தம் பருப்பு போடவும்.

# அருகம்புல் நன்மைகள்

அருகம்புல்லில் பல மருத்துவ குணங்கள் உள்ளன. இது உடல் குளிர்ச்சிக்கு உதவுகிறது, சிறுநீர் பெருக்கியாகவும், ரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை கொண்டது, தோல் நோய்களை குணமாக்கும் மற்றும் உதிரப்போக்கை கட்டுப்படுத்தும் என பல பயன்களை கொண்டுள்ளது.



**உடல் குளிர்ச்சி:**
அருகம்புல் சாறு கோடை வெயிலில் உடல் குளிர்ச்சி பெற உதவும்.

**சிறுநீர் பெருக்கி:**
இது சிறுநீர் பாதையில் ஏற்படும் பிரச்சனைகளை சரிசெய்ய உதவுகிறது.

**ரத்தத்தை சுத்திகரிக்கும்:**
அருகம்புல் ரத்தத்தை சுத்தப்படுத்தி, தோல் நோய்கள் வராமல் தடுக்கிறது.

**உதிரப்போக்கு கட்டுப்பாடு:**
மாதவிலக்கின் போது அதிக ரத்தப்போக்கு இருந்தால், அருகம்புல் சாறு குடித்து கட்டுப்படுத்தலாம்.

**காயங்களை ஆற்றும்:**
வெட்டுக்காயங்கள் மற்றும் காயங்களை ஆற்றும் தன்மை கொண்டது

**வேறு பயன்கள்:**
அருகம்புல் சாறு அல்லது பொடி பல நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது

**பித்த, கப நோய்கள்:**
பித்த மற்றும் கப நோய்களையும் குணமாக்கும் தன்மை கொண்டது

**பொடி பயன்கள்:**
அருகம்புல் பொடியை சுடுநீரில் கலந்து குடித்து வர தோல் பிரச்சனைகள் குணமாகும்.

**எடை குறைப்பு:**
உடல் எடை குறையவும் அருகம்புல் உதவுகிறது.
அருகம்புல் சாறு அல்லது பொடி மருத்துவ பயன்கள் கொண்டது. இது பல நோய்களை குணமாக்க உதவுகிறது

# ராமேசுவரம் கோவிலில் நடிகர் பிரபு சாமி தரிசனம்




நடிகர் பிரபுவுடன் ஏராளமான பக்தர்கள், கோவில் பணியாளர்கள் ஆர்வமுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.
ராமேசுவரம் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்தது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது.
ராமேசுவரம் கோவிலில் சாமி தரிசனம் செய்வதற்காக நடிகர் பிரபு தனது மனைவி புனிதாவுடன் வந்தார். அவர்கள் கோவிலில் விநாயகர், சாமி, அம்பாள், ஆஞ்சநேயர் உள்ளிட்ட சன்னதிகளுக்கு சென்று தரிசனம் செய்தனர். அவருடன் சிவாஜி மன்ற நிர்வாகிகள் தேவதாஸ், பால்ராஜ், சீனி, கவுன்சிலர் முகேஷ் குமார், கோவில் பேஷ்கார் கமலநாதன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். கோவிலுக்கு வந்த நடிகர் பிரபுவுடன் ஏராளமான பக்தர்கள், கோவில் பணியாளர்கள் ஆர்வமுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.
தரிசனம் முடிந்து வெளியே வந்த பிரபு நிருபர்களிடம் கூறியதாவது:- நடிகர் சூர்யாவின் தம்பி கார்த்தி நடிக்கும் மார்ஷல் திரைப்பட சூட்டிங் கீழக்கரையில் நடக்கிறது. அந்த படத்தில் நடிப்பதற்காக ராமநாதபுரம் வந்துள்ளேன். இத்திரைப்பட இயக்குனரும் ராமேசுவரத்தை சேர்ந்தவர்தான். ராமேசுவரம் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்தது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.






வீரம் உள்ளிட்ட பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர் யுவினா பார்த்தவி. அவர் வளர்ந்துவிட்ட நிலையில் ஹீரோயினாக தற்போது நடித்து வருகிறார். அவரது லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்கள் இதோ.

# காந்தாரா படத்தின் பின்னால் உள்ள உண்மை சம்பவம் ரிஷப் ஷெட்டி சொன்ன சீக்ரெட்



சமீபத்திய நேர்காணலில் பேசிய படத்தின் இயக்குனரும் கதாநாயகனுமான ரிஷப் ஷெட்டி, 'காந்தாரா' உருவாக்கத்தின் பின்னணியில் உள்ள கதையை பகிர்ந்து கொண்டார்.
அவர் கூறியதாவது, "சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு, எங்கள் கிராமத்தில் ஒரு விவசாயிக்கும் வன அதிகாரிக்கும் இடையே விவசாய நிலம் தொடர்பாக ஒரு பெரிய மோதல் ஏற்பட்டது. அதை நான் இரண்டு பேருக்கு இடையிலான சண்டையாகப் பார்க்கவில்லை.
அதை இயற்கைக்கும் மனித தேவைகளுக்கும் இடையிலான மோதலாகப் பார்த்தேன். 'காந்தாரா' கதையின் விதை அந்த யோசனையிலிருந்துதான் விதைக்கப்பட்டது. விவசாயத்தைச் சுற்றி நமது கலாச்சாரம் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதைப் பற்றி நான் சிந்திக்கத் தொடங்கினேன்.
காந்தாரா படத்தில் எல்லோரும் கிளைமாக்ஸைப் பற்றிப் பேசுகிறார்கள். அந்தக் காட்சிகளை நான் கற்பனை செய்து பார்த்தேன். எனக்குப் பின்னால் ஏதோ இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி இருந்து அந்தக் காட்சிகளை எழுத வைத்தது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.
படைப்பு சாமானியர்கள் கூட புரிந்துகொள்ள எளிதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அது பிராந்திய எல்லைகளுக்கு அப்பால் அனைவரையும் சென்றடையும். காந்தாரா மீதான எனது நம்பிக்கை மீண்டும் ஒருமுறை உண்மையாகிவிட்டது" என்று அவர் கூறினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com